When only
The best is
Good Enough

Buy
Solide Pumps

# உதயன்

விலை ரூ2/50

தரமானதே சிறந்தது என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 4 சுக்கில ஷூ ஆடி மீ 02 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 13 (17 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 190

## அமிர், யோகேஸின்
# இறுதிக் கிரியைகள் இன்று யாழ் நகரில்
## பூதவுடல்கள் காலை வருகின்றன


அமிர்


யோகேஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கொழும்பில் கடந்த வியாழனன்று சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் பூதவுடல்கள் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு தலைவர்களினதும் பூதவுடல்கள் இன்று மாலையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் சகல மரியாதைகளுடன் தகனம் செய்யப்படும்.

இன்று காலையில் வந்து சேரும் பூதவுடல்களை உடனடியாக இரு தலைவர்களினதும் சொந்த இடங்களுக்கு எடுத்துச் செல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. அமிர்தலிங்கத்தின் பூதவுடல் மூளாய்க்கும்—

திரு. யோகேஸ்வரனின் பூதவுடல் நல்லூருக்கும் எடுத்துச் செல்லப்பட்டு அவர்களது நெருங்கிய உறவினர்களின் வீடுகளில் சுமார் இரு மணி நேரம் வைக்கப்பட்டிருக்கும்.

நண்பகல் அளவில் பூதவுடல்கள் யாழ். நகரில் உள்ள தந்தை செல்வா நினைவு ஸ்தூபிக்கு அருகில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

தலைவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தவரும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கான ஏற்பாடுகளை வடக்கு, கிழக்கு மாகாண அரசு மேற்கொண்டிருக்கிறது.

அஞ்சலி நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின்னர் இன்று மாலையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இதற்காக அமைக்கப்பட்டிருக்கும் சிதையில் அமரர்களின் பூதவுடல்கள் வைக்கப்பட்டு, சிதைக்குத் தீமூட்டப்படும். (உ)

## கொழும்பில் அஞ்சலி

கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் வைக்கப்பட்டிருந்த கூட்டணித் தலைவர்களின் பூதவுடல்களுக்கு நேற்று முன்தினம் மாலை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரதமர் திரு. டி. வி. விஜயதுங்க ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

ஈ. என். டி. எல். எவ். வைச் சேர்ந்த இராஜன், ரெலோவைச் சேர்ந்த செல்வம், புளொட் அமைப்பைச் சேர்ந்த உமா மகேஸ்வரன், மேல் மாகாண சபை ஆளுநர் திரு. எஸ். சர்வானந்தா, ஊவா மாகாணசபை ஆளுநர் திரு. பி. வி. இப்புலான, தென் மாகாணசபை ஆளுநர் திரு. எம். எஸ். அமரசிறி ஆகியோரும் அஞ்சலி செலுத்தினார்கள். (உ-21)

## மூன்றாவது நாள் துக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு-கிழக்குப் பகுதியில் நேற்று மூன்றாவது தினமாகத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

பொதுமக்களின் வசதிக்காக நேற்று கடைகளைத் திறக்குமாறு பணிக்கப்பட்டபோதிலும் போதிய முன் அறிவித்தல் இல்லாததால் பெரும்பாலான கடைகள் மூடிக் கிடந்தன.

யாழ்ப்பாணத்தில் அரசபஸ்களும் சில மினி பஸ்களும் சேவையில் ஈடுபட்ட போதிலும் பயணிகள் குறைவாகவே காணப்பட்டனர்.

நகரில் சோககீதம் ஒலித்துக் கொண்டிருந்தது. (இ-3 51-9)

## ஜனாதிபதிக்கு எதிராக கோஷம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவும், வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னவும் திருகோணமலைக்கு வந்த சமயம் ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் கோஷம் எழுப்பினர்.

பூதவுடல்கள் வைக்கப்பட்டிருந்த திருகோணமலை மாகாணசபைக் கட்டடத்துக்கு ஜனாதிபதி வந்தபோது மக்கள் கோஷம் எழுப்பினர்.

மாகாணசபைக் கட்டடத்தினுள் ஜனாதிபதியும், அமைச்சர்களும் சென்ற சமயம் அவர்களைத் தவிர அவர்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் அஞ்சலி

திருகோணமலை, ஜூலை 17

கூட்டணித் தலைவர்கள் திரு. அமிர்தலிங்கம், திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் பூதவுடல்கள் கொழும்பிலிருந்து நேற்றுக்காலை திருகோணமலைக்கு விமானம் மூலம் கொண்டுவரப்பட்டன.

அங்கு வைத்து மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாள் பூதவுடல்களைப் பொறுப்பேற்றார்.

மாகாணசபையின் பணிமனையில் இரு தலைவர்களினதும் பூதவுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவத்தில் மோட்டார் சைக்கிள் படை!

இலங்கை இராணுவத்தில் புதிய பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

250 சிசி மோட்டார் சைக்கிள் படை என்று இது அறிவிக்கப்படுகிறது. இந்தப் படை வீரர்கள் மோட்டார் சைக்கிளில் ரோந்து சென்று கடமை புரிவர்.

கறுப்புநிற சீருடை அணிந்து நவீன ஆயுதங்களுடன் இவ்வீரர் காணப்படுகிறார்கள்.

மோட்டார் சைக்கிள் வீரர்களுக்கு இடையே வானொலித் தொடர்பும் இருக்கும்.

இது பற்றிய வேறு விவரங்களைத் தெரிவிக்க மறுத்த சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர், இப்படையில் இடம் பெற்றுள்ளவர்கள் எந்த நெருக்கடிக்குள்ளும் நின்று பிடிக்கக்கூடிய வகையில் கடுமையான பயிற்சி பெற்றுள்ளனர் என்று சொன்னார். (உ-எ)

## அமிர், யோகேஸ் கொலை; விசாரணையில் திருப்பம்

கொழும்பு, ஜூலை 17

அமிர், யோகேஸ் கொலைச் சம்பவங்கள் பற்றி பொலீஸார் நடத்திவரும் விசாரணையில் முக்கிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாக இலங்கை வானொலி நேற்று தெரிவித்தது.

இரண்டு தொடர்மாடி வீடுகள் சோதனையிடப்பட்டுத் அங்கிருந்து 2 சுழல் கை, துப்பாக்கிகள், 46 சுற்று ரவைகள், 5 கிலோ ஜெலிக்நைற் வெடிபொருள், குண்டுகளை வெடிக்கச் செய்யும் சாதனங்களைத் தயாரிக்கும் கருவிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர் என்று இலங்கை வானொலி மேலும் அறிவித்தது. (உ-எ)

## பாடசாலைகளைத் திறப்பதா? இன்றைய மாநாட்டில் முடிவு

பாடசாலைகளை மீண்டும் திறப்பதா, இல்லையா? என்பது பற்றி முடிவு செய்ய இன்று கல்வி அமைச்சில் முக்கிய மாநாடு ஒன்று நடைபெறும்.

இப்போது விடப்பட்டுள்ள விடுமுறையை இரண்டாவது தவணை விடுமுறையாகத் தொடருவதா? அல்லது பாடசாலைகளை உடனடியாகத் திறந்து ஆகஸ்ட்டில் நடைபெற உள்ள ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்காக மீண்டும் மூடுவதா?

-இந்த இரண்டில் ஒன்று பற்றி இன்றைய மாநாட்டில் அமைச்சர் முடிவு செய்வார் என்று கொழும்புச் செய்தி தெரிவிக்கிறது. (உ-எ)

# கம்பஹாவில் 6 இடங்களில் 13 மணித்தியால ஊரடங்கு!

கொழும்பு, ஜூலை 17

கம்பஹா மாவட்டத்தில் ஆறு வெவ்வேறு இடங்களில் 13 மணித்தியால ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இம் மாவட்டத்தில் உள்ள பொலீஸ் நிலையத்தை ஜே. வி. பி. தீவிரவாதிகள் தாக்கினர் என்றும்—

அதன் காரணமாகவே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் புதுடில்லிக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிப்பதாக பி. பி. சி. நேற்று இரவு அறிவித்தது.

## மருந்துத் தட்டுப்பாடு விரைவில் ஏற்படும்!

கொழும்பு, ஜூலை 17

விரைவில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்று பொதுமக்களை மருந்துஇறக்குமதியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

தென் பகுதித் தீவிரவாதிகளின் இந்தியப் பொருள்கள் பகிஷ்கரிப்பு இயக்கம் காரணமாக இந்திய மருந்துவகைகள் சந்தையில் விற்கப்படுவது இல்லை.

இலங்கையில் விற்கப்படும் மருந்து வகைகளில் 60 சதவீதமானவை இந்தியஉற்பத்திகளே.

"வேறு பொருள்களைப் போல உடனடியாக மருந்துகளை வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யமுடியாது. இது சம்பந்தமாக பேச்சுக்களை நடத்தி மருந்துகளை இறக்குமதி செய்ய ஒரு வருடமாவது எடுக்கும்."

—இப்படி இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர். (உ-எ)

## ஜீ.சி.ஈ. பரீட்சைகள் திட்டமிட்டபடி நடக்கும்

கொழும்பு, ஜூலை 17

திட்டமிட்டபடி ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை வருகிற ஆகஸ்ட் 19 முதல் செப்டம்பர் 11 ஆம் திகதி வரை நடத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர்வெதமுல்ல தெரிவித்தார்.

ஜீ. சி. ஈ. சாதாரண பத்திரப் பரீட்சைக்கான திகதியிலும் மாற்றமில்லை.

திட்டமிட்டபடி டிசம்பர் முற்பகுதியில் ஜீ. சி. ஈ. சாதாரண பத்திரப் பரீட்சை நடத்தப்படும்.

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. ஆகஸ்ட் முற்பகுதியில் பிரவேசப் பத்திரங்கள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்படும். வழமையான வேலையில் மேலும் தடங்கல்கள் ஏற்படாதிருப்பின் ஆவணித்தும் திட்டமிட்டபடி நடத்தப்படும்.

-இப்படி பரீட்சை ஆணையாளர் திரு. வெதமுல்ல சொன்னார். (உ-எ)

## முச்சந்தி முரளி


மோட்டார் சைக்கிள்களிலே அதி வேகமாய்ப் போய் அதிரடி அடிப்பினமோ......?

### சுபநேரம்
17—07—1989
ஆடி 02 — திங்கட்கிழமை
நக்ஷத்திரம்: மூலம்
சுபநேரம்:
12.00 முதல் 01.30 வரை
ராகுகாலம்:
07.30 முதல் 09.00 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## பாக். பயணம்

அண்மையில் இலங்கை வந்து திரும்பிய திரு. பி. ஜி. தேஷ்முக் நேற்றுக் காலை புதுடில்லியில் இருந்து பாகிஸ்தான் சென்றார்.

பிரதமர் காந்தி டம் கொழும்பில் நடத்தப்பட்ட பேச்சுக்கள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கவே திரு. தேஷ்முக் அங்கு சென்றுள்ளார். (ஓ-எ)

## சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவதில் எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 17

இலங்கைக்குக் கடன் வழங்குவதில் சர்வதேச நாணய நிதியம் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

1987 இல் கடன் வழங்கும்போது அது விதித்த நிபந்தனைகளை இலங்கை அரசு இன்னும் நிறைவேற்றவில்லை.

மேலும் கடன் பெறுவதற்கு முன்னர் வரவுசெலவுத் திட்டத்தில் உள்ள துண்டு விழும் தொகையையும் வெளிநாட்டுக் கடன் இருப்பையும் குறைக்கும் படியும் நாணய மதிப்பை குறைக்கும்படியும் சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்திருந்தது. (ஓ-எ)

## ★ கட்டுநாயக்காவில் வைத்து ராய்ட்டர் செய்தியாளர் திருப்பி அனுப்பப்பட்டார்

ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தின் புதுடில்லி பிரதம செய்தியாளர் திரு. மைக்கல் பாட் என்பவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இலங்கை அதிகாரிகளால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்.

அவரிடம் பத்திரிகையாளர் விஸா இருந்தது. இவர் நேற்று புதுடில்லியில் இருந்து கட்டுநாயக்காவந்திறங்கினார். அப்போது அதிகாரிகள் அவரை விமானத்தில் மீண்டும் ஏற்றி திருப்பி அனுப்பி வைத்தனர். (உ-எ)

## கோண்டாவில் பகுதியில் தேடுதலும், ஊரடங்கும்

இருபாலை, கோண்டாவில், உரும்பிராய் ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை 10 மணி முதல் தீவிர தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கும் அமுல் செய்யப்பட்டது.

தேடுதல் காரணமாக இந்தப் பகுதிகளுக்குள் எவரும் செல்லவோ, வெளியேறவோ அனுமதிக்கப்படவில்லை.

பலாலிவீதி, பருத்தித்துறை வீதி போக்குவரத்துகள் யாவும் மருதனமடம் ஊடாக காங்கேசன்துறை வீதியினூல் நடைபெற்றன.

மாலையில் நிலைமை வழமைக்குத் திரும்பியது. [உ-9]

## கொழும்பு மாநாட்டை அமெரிக்கா பகிஷ்கரிக்கும்

கொழும்பு, ஜூலை 17

கொழும்பில் நடைபெறவுள்ள இந்து சமுத்திரம் பற்றிய சர்வதேச மாநாட்டை பகிஷ்கரிக்கப்போவதாக அமெரிக்கா பயமுறுத்தியுள்ளது.

இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாகக் கருத வேண்டும் என்ற நிலைப்பாட்டைத் தன்னால் ஏற்கவேமுடியாது என்று அமெரிக்கா இதற்குக் காரணம் காட்டியிருக்கிறது.

ஐ. நா. வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் இருந்து இது தெரியவந்திருக்கிறது.

அமைதிப் பிராந்தியத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், இந்து மகாசமுத்திரத்தில் வல்லரசுகள்பிரசன்னமாக இருக்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. இதனை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. (உ-எ)

## வெளிநாட்டு செலாவணி; அரசு நெருக்கடிநிலையில்!

இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணிக் கையிருப்பு இருநூறுகோடி ரூபா அளவுக்குக் குறைந்துவிட்டது.

அரசாங்க வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன என்று கொழும்புச்செய்தி கூறுகிறது.

இதனால் விரைவில் நாடு வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி ஒன்றை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக வர்த்தக வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் பணப்புழக்கம் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 17

கொழும்பில்வங்கி வேலைநிறுத்தம் வழமைக்குத் திரும்பாததால் காசோலை கொடுத்து பொருள்கள் கொள்வனவு செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

வழமையாக கொழும்பில் வர்த்தகர்கள் காசோலைக்கே பொருள்களை வழங்குவதுடன், வங்கிகளில் பற்றுச் செய்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### காணி விற்பனே

நவாலியில் 17 பரப்புக்காணி வளவுடன், பருத்தித்துறையில் ஹாட்லிக் கல்லூரி மாணவர் விடுதிக்குச் சமீபமாக 3பரப்புக் காணியும், மந்திகையில் கந்த முருகேசனர் (சிலே அருகில் 2 பரப்புத் தோட்டக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செ. கணேசராசா, சட்டத்தரணி தம்பசெட்டி பருத்தித்துறை அல்லது இல; 195,கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (11550)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் பேடு. பிறவுண் சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (19-7-89) புதன்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை. ரூ: 3/50) உடன் பதிவு செய்க: இல: 9, கந்தையா லேன், சுன்னகம்; (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்.) (1091)

### G. C. E. (O/L) New Syllabus

கணித பாடத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கு 10 மாதிரி வினத்தாள்கள் (ஐந்து வினத்தாள்கள் விடைகளுடன்) இலவச அனுபந்தமாக 300 பயிற்சி விளக்கங்களைக் கொண்டது. விடுமுறைக்கு பயிற்சி பெறவும் திறமைச் சித்திக்கு வழிகாட்டும் கைநூல் விலை ரூபா 37/50 உயர் கல்விப் பதிப்பக வெளியீடு புத்தகசாலையை அணுகுக. (11473)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3034)

### மணமகன் தேவை

1958 ஆம் ஆண்டு பிறந்த பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியைக்கு அரசாங்கத்தில் வேலைபார்க்கும் மணமகன் தேவை: சீதனம் தரப்படும்; எஸ். குபேரன், 469, நாவலர் றேட், ஆனைப்பந்தியடி யாழ்ப்பாணம். (11542)

யாழ் இந்து வேளாள 28 வயது எஞ்சினியருக்கும், 27 வயது கோவியரின Doctor பெண்ணுக்கும், இரண்டு குருகுல மணப் பெண்களுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி யாழ்ப்பாணம். (1097)

### மணமகள் தேவை

யாழ்ப்பாண வேளாள கத்தோலிக்க வெளிநாட்டில் B.Sc. ஆசிரியர் வீவில் வந்துள்ள அவருக்கு 36-43 வயதிற்கிடைப்பட்ட பட்டதாரி அல்லது அதனோடு ஒத்த உள்நாட்டு வெளிநாட்டு மணமகள் தேவை: வெளிநாட்டு வேலை வாய்ப்பு மணமகனுக்கு தரப்படும். சமயம் தடையாக இருக்காது: மங்களா ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (1095)

யாழ். இந்து வேளாள 28 வயது D/Accountant மணமகனுக்கு டாக்டர் பெண் செவ்வாய்க் குற்றத்தில் தேவை. தொடர்பு: ABCDE 328 நாவலர்றேட், ஆனைப்பந்தி. (1098)

### சேவை

பிரபல சேவையாளர் கட்டிட கொன்றத்துக்காரர் கொடுக்கும் தவணையில் செய்து முடிப்பவர் எஸ், குபேரன் இல; 469, நாவலர் றேட், யாழ்ப்பாணம். (11543)


## ஓய்வு பெறுகிறார்

பண்டத்தரிப்பு, ஜூலை 17

யாழ்ப்பாணக் கல்லூரியின் மருதனுமடம் விவசாயப் பாடசாலையின் அதிபர் திரு. ஜெயரத்தினம் ஓய்வு பெறுகிறார்.

இவரது இடத்துக்கு திரு. த. குகதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-120)

# வறிய மாணவ மாணவியருக்கு சீருடை - அப்பியாசக் கொப்பிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்-மாவட்டத்தில் உள்ள வறிய பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு விரைவில் சீருடைகளும், அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட உள்ளன.

இந்திய அரசால் வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு வழங்கப்பட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கான சீருடைகளும், அப்பியாசப் புத்தகங்களும் யாழ் - கல்வித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏழைப் பிள்ளைகளுக்கு இப்பொருள்கள் கோட்டக்கல்வி அலுவலகங்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்பு கிடைத்த தொகையுடன் மேலும் ஒரு தொகுதிப் பொருள்கள் யாழ் - கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர உள்ளன.

விரைவில் இப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## தளபாடம் வாங்க உதவி

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தின் காரியாலயத்துக்குத் தளபாடங்கள் வாங்குவதற்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 10ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

பேருட் அமைப்பும் முன்பு இச்சம்மேளனத்துக்கு உதவி வழங்கியது குறிப்பிடத்தக்கது. [இ-3]

## தொழில் நுட்பவியல் டிப்: பட்டதாரிகளுக்குச் சலுகை

கொழும்பு ஜூலை 17

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட தொழில் நுட்பவியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நடுத்தர தொழில் நுட்பசேவையில் மூன்றும் வகுப்புக்குரிய முதலாம் திணைக்களப் பரீட்சையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பவியலில் தேசிய டிப்ளோமா பட்டத்தையோ, கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகஸ்தருக்குரிய சான்றிதழையோ கொண்டிருக்கும் இலங்கை உத்தியோகஸ்தர்களுக்கே இவ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க, நிருவாக, மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இதுசம்பந்தமான சுற்று நிருபத்தை அனுப்பியுள்ளது. (இ-7)

## தென் அமெரிக்க சம்பியன் கிண்ணம்:

# இறுதி ஆட்டத்துக்கு பிறேசில் அணி தெரிவு

பிறேசில், ஜூலை 17

தென் அமெரிக்க சம்பியன் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப்போட்டியின் அரை இறுதி ஆட்டமொன்றில் ஆர்ஜென்டீனாவை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்ததன் மூலம் பிறேசில் அணி இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

1,10,000 பார்வையாளர்கள் மத்தியில் பிறேசில் மரகானு விளையாட்டரங்கில் நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் உலகக்கிண்ணச் சம்பியன்களான ஆர்ஜென்டீனாவை எதிர்பாராத விதமாக பிறேசில் தோற்கடித்தது.

பிறேசில் அணிக்கான கோல்களை இடைவேளையின் பின்னர் பெபேடோ, றொமாரியே ஆகியோர் பெற்றனர்.

இறுதி ஆட்டத்தில் உருகுவே அணியை எதிர்த்து பிறேசில் போட்டியிடும்.

உருகுவேயிடம் மற்றைய அரை இறுதி ஆட்டத்தில் தோல்வியுற்ற பரகுவே அணி மூன்றுவது இடத்துக்காக ஆர்ஜென்டீனாவை எதிர்த்து ஆடும். (இ-6)

# அனைத்து இன மக்களுக்கும் பாரபட்சமின்றி உதவி

## நிதி வழங்கும் வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் மாகாண அரசு பாரபட்சமின்றி உதவி வருகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண போக்குவரத்து கைத்தொழில் அமைச்சர். ஜனுப் எம். கே. அபுயூசுப் மூதூர் பெரிய பள்ளிவாசல், பெரிய பாலம் ஜும்மா பள்ளிவாசல் ஆகியவற்றிற்கு ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாவை புனரமைப்பு நிதியாக வழங்கி உரையாற்றுகையில் மேற் கண்டவாறு கூறினர்.

வடக்கு - கிழக்கு மாகாண திருமலை மாவட்ட உறுப்பினர் ஜனுப்: எம். ரி. ஹாஜா வைபவத்திற்கு தலைமை வகித்தார்.

அமைச்சர் ஜனுப்: அபுயூசுப் மேலும் உரையாற்றுகையில் 'வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள வணக்க ஸ்தலங்களின் புனரமைப்புக்கு பாரபட்சமின்றி மாகாண அரசு உதவும்' என்றார்.

வைபவத்தில் வடக்கு-கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான திரு. போல்ராஜ் பாய்வா, ஜனுப். ஜவாட் மரைக்கார், மாகாணப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் திரு. கே. பஞ்சாச்சரவேல், முதலமைச்சரின் பொதுசன தொடர்பு அதிகாரி திரு. ஏ. ஜெயகிருஷ்ணசீலன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## ஜனசக்தி கார்ட்டுகள்

பச்சிலைப்பள்ளி, ஜூலை17

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அனைவருக்குமான ஜனசக்தி உரித்து கார்ட்டுகள் உதவி அரசாங்க அதிபர் திரு. சு. கந்தசாமியால் கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் வழங்கப்பட்டு வருகின்றன. [ச- 117]

# கணிதமே யாழ். மாணவரின் முதலாவது விருப்புப் பாடம் தேசிய மட்ட மதிப்பீடு காட்டுகிறது

மானிப்பாய், ஜூலை 17

தேசிய ரீதியில் நடத்திய மதிப்பீடு ஒன்றின்படி இலங்கை மாணவர்கள் தமது தாய் மொழியையே முதலாவது விருப்புப் பாடமாகவும் கணிதத்தை இரண்டாவது விருப்புப் பாடமாகவும் வர்த்தகம் - கணக்கியலை மூன்றுவது விருப்புப் பாடமாகவும் கொள்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை கணிதபாடமே முதலாவது விருப்புரிமைப் பாடமாக இருக்கின்றது என இந்தமதிப்பீடு காட்டியது.

தேசிய கல்வி நிறுவனத்துடன் சேர்ந்து மதிப்பீடுகளை மேற்கொண்ட வர்த்தகமும் கணக்கியலும் பாட யாழ்ப்பாண சேவைக்கால ஆசிரியர் திரு. க. பாலசுப்பிரமணியம் பயிற்சி வகுப்பு ஒன்றில் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

தேசியக் கல்வி நிறுவனம் செய்த ஆய்வுகளின்படி 92சதவீதமான மாணவர்கள் புத்தகங்களைப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வர்த்தகமும் கணக்கியலும் பாடத்தை உயர்கல்விக்காகவும், சுயதொழில் தேடிக் கொள்வதற்காகவும் 84 சதவீதத்தினர் விருப்பத்துடன் கற்பதாகவும் இந்த மதிப்பீடு காட்டியுள்ளது. (இ-90)

## கொழும்பு புறப்பட்டவர் சடலமாக மீட்பு

காரைநகரில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். நேற்று முன் தினம் இரவு இச் சம்பவம் நடந்தது.

இறந்தவர் பஞ்சாட்சரம் நாகேஸ்வரராஜா (வயது 20).

கடந்த 6 ஆம் திகதி இவர் தமது வீட்டிலிருந்து கொழும்புக்கு என்று புறப்பட்டுச்சென்றார் என்று மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம்நேற்று முன் தினம்அமைதிப்படையினரால் யாழ்ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (இ-9)

## முதலுவிப் பெட்டி

யாழ்ப்பாணம் ஜூலை 17

செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளையில் முதலுதவிப் பெட்டிகளும் கைநூலும் தற்போது விற்பனை செய்யப்படுகின்றன.

அத்தியாவசிய சில மருந்துப் பொருள்கள் அடங்கிய பிளாஸ்டிக் முதலுவிப் பெட்டியே விற்பனை செய்யப்படுகின்றது.

# பத்திரிகையாளர்கள் சக்தி மிக்க போராளிகள்

## சர்வதேச பத்திரிகையாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை17

உலகில் துப்பாக்கிகள் இன்றி பணிபுரியும் சக்திமிக்க போராளிகள் பத்திரிகையாளர்கள்.

சர்வதேச பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளர் நாயகம் வியாடிமிர் ஆர்டியோமோவ் முன் கண்டவாறு கொழும்பில் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

உண்மை, நீதி, சமத்துவம் ஆகியவற்றுக்காக உலகம் முழுவதும் பெரியபோராட்டத்தை பத்திரிகையாளர் நடத்திவருகிறார்கள். ஆயுதம் இல்லாத இராணுவமாக அவர்கள்விளங்குகிறார்கள். அவர்களின் வலிமையைக்குறைத்து மதிப்பிட முடியாது.

போதுமான தொழில் பாதுகாப்புக் கோரி உலகம் முழுவதும் உள்ள பத்திரிகையாளர் ஒன்றுசேர்ந்து போராட வேண்டும்.

—இப்படி அவர் சொன்னர். (உ-எ)


## முதலாம் ஆண்டு இதய அஞ்சலி



அமரர் த. வல்லிபுரம்

- அவர்கள் -

(இலங்கைவங்கி பருத்தித்துறை முன்னுள் முகாமையாளர்)

மண்ணில்: 21 - 04 - 1936 விண்ணில்: 17 - 07 - 1988

திதி: 05. 08. 1989

ஆண்டொன்று ஆனலும் ஆறுதையா
உம் பசுமையான நினைவலைகள்!
எம் நெஞ்சிலிருந்து கொட்டும் உதிர அலைகளை
இறைவனைத் தவிர யாரறிவார்?

என்றும் உம் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்தித்து

உமது நினைவால் வாடும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
உறவினர்கள்,

தாமரைக் குளத்தடி,
துன்னலை தெற்கு,
சரவெட்டி. (11546)

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



சூசைப்பிள்ளை ஆசிர்வாதம் (ஜெகா, ருஜ்குமார்)

அன்னையின் மடியில்: 03 - 09 - 1962 ஆண்டவன் அடியில்: 17 - 07 - 1986

அன்பின் திருவுருவாய். அறிவின் சுடர் ஒளியாய் பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் மூத்தவனாய், மகிழ்வோடு வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு அகன்ற எங்கள் அன்பனே ஜெகா! நீ பிரிந்து மூவாண்டு சென்றாலும் உன்முகமோ எம்முன்னே முழுமதிபோல் திகழ்கின்றது.

எம் உயிர் இருக்கும் வரை உன் நினைவு எம்மைவிட்டு அகலாது.

உனது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்:
அப்பா, அம்மா, தம்பிமார்.
உறவினர்கள், நண்பர்கள்.

மணல்குடியிருப்பு,
முல்லைத்தீவு. (1211)

## ஓராண்டு நினைவஞ்சலி



அந்தோனி பொன்னுத்துரை

அன்னையின் மடியில்: 01 – 07 – 1927 ஆண்டவன் மடியில்: 17 07 – 1988

எமது அன்பு ஐயா!

எமது குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்த நீங்கள் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டீர்களே! மின்னல் போல் மறைந்தீர்களே; உங்கள் அருமை முகத்தை இனி நாம் எப்போ காண்போம்? நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு என்றென்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மச்சான், மச்சான்மார், நண்பர்கள்.

44, புது வீதி, பாஷையூர்;
யாழ்ப்பாணம். [1193]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கனில் நியமிக்கப்படும்

# இடைக்கால அரசுடன் பேசுவதற்கு தயார் என முஜாஹூதீன் அறிவிப்பு

இஸ்லாமபாத், ஜூலை 16
சோவியத் அரசாங்கம் இடைக்கால அரசு ஒன்றை ஆப்கனிஸ்தானில் அமைக்குமானல் அதனுடன் பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருப்பதாக முஜாஹூதீன் கெரில்லாக்களில் மிதவாதத் தலைவராகக் கருதப்படும் செய்யத் அஹ்மத் கெய்லானி அறிவித்திருக்கிருர்.

பேச்சுக்கள் நடத்த தற்சமயம் 'முள்' ஆக இருக்கும் டாக்டர் நஜிபுல்லா அரசாங்கத்தை அகற்ற சோவியத் அரசு உதவ வேண்டும்.

ஆப்கன் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்று சோவியத் அரசு உளப்பூர்வமாக விரும்பினுல் இதைச் செய்யும் என்று நம்புகிறேம்.

காபூலில் நடுநிலையான உண்மையான இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்படின் உடனடியாக பேச்சுக்களை நடத்த முஜாஹூதீன் கெரில்லாக்கள் தயாராக இருக்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான ஆப்கனியர்களை படுகொலை செய்த ஓர் அரசை அங்கீகரித்து அதனுடன் பேச்சு நடத்த கெரில்லாக்கள் தயாராக இல்லை.

இப்படி கெய்லானி சொன்னர்.

முன்னுள் ஆப்கன் மன்னர் சாஹிர்ஷா மீண்டும் ஆப்கன் திரும்ப வேண்டும் என்று கோரி வருபவர்களில் ஜனுப். கெலய்ானியும் ஒருவர்.

## நச்சு வாயுப் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா

வாஷிங்டன், ஜூலை 16
நச்சுவாயுதயாரிக்கும் இரசாயனப் பொருட்களை ஏற்றுமதி செய்யவேண்டாம் என்று இந்தியாவை அமெரிக்காகேட்டுக்கொண்டிருக்கிறது.

நச்சுவாயுக்குத் தேவையான இரஸாயனப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் இந்தியா ஈடுபட்டு வருவதாக வெளிவந்த செய்திகள் குறித்து அமெரிக்க ராஜாங்க அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.

நச்சுவாயு ஆயுதங்கள் உலகில் பரவலாகத் தயாரிக்கப் பட்டுவருவது, உலகுக்கே பயமுறுத்தலாகும் என்று அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் சொன்னர். (எ)

## புரட்சிவிழா முடிவு

பாரிஸ், ஜூலை 16
பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவுவிழா நேற்று முடிவடைந்தது.

பத்து லட்சத்துக்கு அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். 30 நாடுகளின் தலைவர்களும் பங்குபற்றினர். (எ)

## பூட்டாசிங் கொலை முயற்சி

புதுடில்லி ஜூலை 16
உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கை கொலை செய்ய முயற்சித்த சம்பவம் ஒன்று தொடர்பாக பொலீஸார் புதுடில்லியில் பிந்தா என்று அழைக்கப்படும் பூபந்தர்சிங் என்பவரை கைது செய்தனர். [எ]

## சீனுவில் 700பேர் மரணம்

பீகிங் ஜூலை 16
சீனுவின் தென் மேற்கு மாகாணமானசிச்சுவான்பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால்—மண்சரிவினுல் 700க்கு அதிகமானேர் உயிரிழந்தனர் என்று அதிகாரபூர்வமான செய்திகள் தெரிவித்தன. [எ]

## காபூலில் கார்க்குண்டு; 20 பேர் பலி!

காபூல், ஜூலை 16
ஆப்கன் தலைநகர் காபூலில் கார்க்குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் உயிரிழந்தவர் எண்ணிக்கை 20 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

50 பேர் வரையில் காயமடைந்தனர் என்றும் காபூல் வானெலி தெரிவித்தது. (எ)

## 4 இராணுவ அதிகாரிகளுக்கு கியூபாவில் மரணதண்டனை!

ஹவானு, ஜூலை 16
போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்டதற்காக கியூபாவில் நான்கு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் வியாழனன்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இராணுவ நீதிமன்றம் விசாரணையின் பின்னர் இவர்கள் மீது மரணதண்டனை விதித்திருந்தது.

கருணை காட்டும்படி பாப்பாண்டவர் உட்பட பல உலக நாடுகளின் தலைவர்கள் கியூபா ஜனுதிபதிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

ஆனல் திரு. காஸ்ட்ரோ தன்னுல் மன்னிப்பு அளிக்க முடியாது என்றும் 29 உறுப்பினர் கவுன்ஸில்தான் அதற்குப் பொறுப்பு என்றும் தெரிவித்தார்.

ஆனல் அந்தக் கவுன்ஸில் மரணதண்டனையை ஊர்ஜிதம் செய்தது. (உ-எ)

## தூரதர்ஷனில் 'பைபிள்' டிசம்பர் முதல் ஒளிபரப்பு

இந்திய தூரதர்ஷனில் மகாபாரதம் தொடர் முடிவடைந்த பின்னர் 'பைபிள்' வருகிற டிசம்பர் முதல் ஒளிபரப்பப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

'பைபிள்' தொடர் ஒளிபரப்பை நடத்த தூரதர்ஷன் சம்மதித்து விட்டது.

'மை டியர் குட்டிச்சாத்தான்' என்ற படத்தைத் தயாரித்த நவோதய நிறுவனம் 'பைபிள்' கதையை டி. வி. தொடராக படமாக்கத் தொடங்கியுள்ளனர்.

இது ஹிந்தி மொழியில் 39 வாரங்கள் ஒளிபரப்பப்படவுள்ளன.

நான்கு கோடி ரூபா செலவில் இத்தொடர் தயாரிக்கப் படுகிறது.

பைபிளின் பழைய, புதிய ஏற்பாடுகளில் உள்ள முக்கிய நிகழ்ச்சிகளைத் தொகுத்ததாக இப்படம் அமையும் என்று நவோதய நிறுவன அதிபர் திரு. அப்பச்சன் தெரிவித்தார்.

ஏற்கனவே இராமாயணத்தைத் தொடராக தூரதர்ஷன் ஒளிபரப்பியது தெரிந்ததே. (எ)

## சோமாலியா கலவரத்தில் 20 பேர் பலி!

மொகாடிஷு, ஜூலை 16
சோமாலியா தலைநகர் மொகாடிஷுவில் ஏற்பட்ட கலவரத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

பொலீஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் நேற்றும் நீடித்தது. அனல் உயிரிழப்புப் பற்றி அறிவிக்கப் படவில்லை.

பள்ளிவாசல் தொழுகை ஒன்றின் பின்னரே இந்த மோதல் ஏற்பட்டது.

மக்களை அமைதியாக இருக்கும்படி சோமாலிய ஜனுதிபதி கேட்டிருக்கிருர். (எ)

## ராஜீவ் இன்று டில்லி திரும்புகிருர்

இஸ்லாமபாத், ஜூலை 16
பிரதமர் ராஜீவ் காந்தி நாளை (திங்கள்) புதுடில்லி திரும்புகிருர்.

அதற்கு முன்னர் திரு. காந்தி, பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர்பூட்டோவுடன் சேர்ந்து செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொள்வார். (எ)




அன்டன்–
முதன் முதலில் மழை நீர்ப் பீலிகளில் நெளிவு ஏற்படாவண்ணம் அல்ட்ரு வயலட் ஸ்டபிலைஸரால் தயாரித்தது.
அன்டன்
முதன் முதலில் பவுடர் சேர்ந்த சன்னங்களைக் கொண்ட பீவீசி கொம்பவுண்டைத் தயாரித்தது.
அன்டன்
பூரணமான தண்ணீர் குழாய் பரிசோதனை வசதிகளை முதன் முதலில் ஏற்படுத்தியது.
அன்டன்
விடு கட்டுபவர்கள் 40 சத வீதம் மீதப்படுத்தும் வகையில் தண்ணீர் குழாய்களை 1983ம் ஆண்டின் 147 வது எஸ் எல் எஸ் தராதரத்துக்கமைய மூன்று சுவர்க் கனங்களில் முதன்முதலில் தயாரித்தது.
அன்டன்
80 வெவ்வேறு அளவுகளில் ஒன்றிணைப்புகளில் நீர் ஒழுகாது பொருந்தும் வண்ணம் நுட்ப இஞ்ஜெக்ஷன் வார்ப்புகளை முதன் முதலில் தயாரித்தது.
அன்டன்
இஞ்ஜெக்ஷன் வார்ப்பு முறையில் வடிகால் சாக்கடை நீர் செல்லும் குழாய்ப் பொருத்துகளை முதன் முதலில் உற்பத்தி செய்தது.

சந்தைப்படுத்துவோர்:-
**சென்ற் அன்தனீஸ் இன்டஸ்ட்ரீஸ் குழு**
512, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 20622-4.
விநியோகிப்போர்

யாழ்ப்பாணத்தில்
அன்டன் விற்பனையாளர்
சிரிசன்ஸ்,
19, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 22568

கல்முனையில்
அன்டன் விற்பனையாளர்,
கொழும்பு ட்றெப்பரி ஸ்ரோஸ்,
24, பிரதான வீதி,
கல்முனை.
தொலைபேசி: 067 2154.

ANTON
முழுமைச் சேவையின் முன்னோடி.

# நிவாரண பணம் வழங்குவதில் பெரும் இழுபறி நிலைமை

யாழ்ப்பாணம், ஜூலை 17
மீளக்குடியமர்தல் நிவாரணப் பணம் வழங்குவதில் பெரும் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

ஏற்கனவே வங்கிகளில் கொடுபடாமல் தேங்கிக் கிடந்த நிவாரணப் பணத்தை உடனடியாக வழங்குவதற்கு வங்கி நிர்வாகங்கள் நடவடிக்கை மேற்கொண்டன.

எனினும் எந்த நாட்களில் இவை வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து வங்கி நிர்வாகங்கள் இன்னும் உறுதியாகத் தீர்மானம் செய்யவில்லை.

இதனுலேயே நிவாரணப் பணம் வழங்குவதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் நிவாரணப் பணம் வழங்கப்பட்டு வருவதாக அறிய வந்துள்ளது. (இ-10)

## குரு பூர்ணிமா தினம்

குரு பூர்ணிமா தினம் நல்லூர் பகவான் ஸ்ரீ சத்யசாயி இல்லத்தில் நாளை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படும். (ச)

### சமய சந்நிதிகளில்

## நயினை கந்தசாமி கோவில் உற்சவம்

குருநகர், ஜூலை 17
நயினுதீவு, ஸ்ரீ காட்டுக் கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இம்மாதம் 20- ஆம் திகதி வியாழக்கிழமை ஆடிவேல் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

காலை 10- மணிக்கு ஸ்ரீவேல் முருகப்பெருமான் தெய்வானை வள்ளி சமேதரராக தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி சமுத்திரத்தீர்த்த மாடி கோவிலுக்கு எழுந்தருள்வார்.

நண்பகல் 12-00 மணிக்கு ஸ்ரீ முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதனை அடுத்து மெய்யடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (இ- 51)

## மாவையில் இன்று திருமஞ்ச பவனி

காங்கேசன்துறை, ஜூலை 17
மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தின் பத்தாவது நாளான இன்று திருமஞ்ச பவனி நடைபெற இருக்கிறது. காலையில் விசேட அபிஷேகமும் மாலை சந்தனக்காப்பும் திருமஞ்ச பவனியும் இடம் பெறும். (இ-68)

## கண்ணகை அம்மன் தேர்

யாழ்ப்பாணம், ஜூலை 17
கோப்பாய் பலாலை ஸ்ரீ கண்ணகை அம்மன் தேர் உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது.

நாளை தீர்த்த உற்சவம் நடைபெறும். (க-3)

## குருக்கள் கிணற்றடி விநாயகர் தேர்

தெல்லிப்பழை அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய உற்சவங்கள் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின.

தேர்த்திருவிழா இன்று 17 ஆம் திகதி திங்கட்கிழமையும், தீர்த்தத்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெறும். (ச)



ஐக்கிய ஜெபம்

நாளை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8-00 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

வடபிராந்திய அசெம்பிளி
ஒப்கோட் சபை.
(C/2910)

உ
அளவெட்டி தெற்கு
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய
**தேர்த்திருவிழா உற்சவம்**

திருத்தேர் ஏறிவரும் அளவெட்டி தெற்கு
ஸ்ரீ முத்துமாரி அம்பாளின்
அருட்காட்சியைக் காண வாருங்கள்
எமது
அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
அம்பாளின் ஆசி கிடைக்க
வாழ்த்துகின்றேம்

**NATIONAL SHIPPING & TRAVELS**
185/2, Kasthuriyar Road,
JAFFNA.
[சி-3051]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரம்மி கூந்தல் தைலம்**

இத்தைலத்தை தினமும் சிரசில் பாவித்து வந்தால் தலைமுடி நரைத்தல், தலை மயிர் உதிர்தல், தலைவலி, கண்ணீர் வடிதல், தும்மல், மூக்கு அரிப்பு முதலிய ரோகங்களுக்கு நிவாரணம் தருவதோடு கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும் கருமையாகவும் வளரச் செய்யும்

**க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்**
மருந்துக்கடை
76, பெரியகடை, யாழ்ப்பாணம்:
போன்: 23135



# உதயன்

17 - 07 - 1989 திங்கட்கிழமை



**பொன்னாங்காணித் தைலம்**

சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால் மண்டையிடி, தலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, பீனிசம், அந்திக்கண் மங்குதல், தூக்கமின்மை, கண்ணெரிச்சல், உஷ்ணக்காந்தல் முதலான வியாதிகளைக் குணமாக்குவதோடு மூளைக்குக் குளிர்ச்சியையும், கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுத்து கூந்தலை அழகாகவும் கறுப்பாகவும் நீளமாகவும் வளரச் செய்யும்.

**க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்**
மருந்துக்கடை
(5) 76, பெரியகடை, யாழ்ப்பாணம்:
போன்: 23135


## யாழ்., வன்னி எம்.பிக்கள் கூட்டாகக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை கண்டித்து யாழ் மாவட்ட எம். பியான திரு. கே. பிரேமச்சந்திரனும் வன்னி மாவட்ட எம். பியான திரு. இரா. குகனேஸ்வரனும் இணைந்து அறிக்கை ஒன்றை வவுனியாவில் வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

தலைவர்களை கபடத்தனமாகச் சுட்டுக்கொலை செய்வது அநாகரிகமானதும் உலக மனிதப்பண்பாட்டுக்கு இழுக்கானதும் ஆகும்.

இப்படியான காட்டுமிராண்டித் தனமாகக் கொலைகளை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் கொலையுண்ட தலைவர்களின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்; என்று உள்ளது. (ஒ)

## சட்டவிரோத சக்திகளுக்கு எதிராக போராடுவோம்

### அமைப்புகள் இணைந்து அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 17

சட்ட விரோத சக்திகளுக்கு எதிராக ஐக்கியப்பட்டுப் போராடுவோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஈழமாணவர் பொதுமன்றம், ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி, ஈழத்தொழிற்சங்க சம்மேளனம் ஆகிய 8 உம் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களான திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோர் கொலை செய்யப்பட்டதை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அகிம்சைப் போராட்டங்களில் நம்பிக்கை கொண்டவர்களும், ஜனநாயக வழிமுறைகளில் செயல்பட்டு வந்தவர்களுமான கூட்டணித் தலைவர்கள் இவ்வாறு கொலை செய்யப்பட்டது அனைத்து தமிழ்பேசும் மக்களுக்கும் வேதனையையும், வெறுப்பையும் தருவதாகும்.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக ஈடுபாடு கொண்டிருந்த தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் மற்றைய தலைவர்களும் தனிநாட்டுக் கோஷத்தை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தியதோடு, தமிழினத்தின் இன்னல்களை உலகறியச் செய்தவர்கள் என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

மாற்று இயக்கப் போராளிகளையும், அரச அதிகாரிகளையும், கல்விமான்களையும், பத்திரிகையாளர்களையும், அரசியல் கட்சித் தலைவர்களையும் கண்மூடித்தனமாகப் படுகொலை செய்யும் இவ்வாறான நடவடிக்கைகள் தமிழினத்தை அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்வதாய் அமையும்,

எனவே நாம் அனைவரும் கட்சி பேதமின்றி, கருத்து வேறுபாடுகளை மறந்து இச் சமூக விரோத சக்திகளை எதிர்த்துப் போராட முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரெலோ கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 17

திருவாளர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்தும் அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் தமிழ்ஈழ விடுதலை இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய எம். பியுமான திரு அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், முன்னாள் எம். பி. திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் ஆகியோருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவர்களுடைய குடும்பங்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

மேலும் "இத்தகைய கொலைகளைக் கைவிட்டுச் சிந்தித்து மக்களின் அழிவை உடனடியாக நிறுத்தும்படி நாம் வேண்டுவதுடன் இப்படுகொலைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்,

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வர்த்தக ஊழியர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கூட்டணித் தலைவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ்ப்பாணம் வர்த்தகர் ஊழியர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. ச. தியாகராசா நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சிங்களப் பேரினவாதிகளும், அதன் சர்வதேச கூட்டாளிகளும் தமிழ்பேசும் மக்கள் மீது எல்லாவிதமான அடக்குமுறைகளையும், அழிவுகளையும் ஏற்படுத்திய வேளையில் அவற்றுக்கு எதிராக இன்றைய காலகட்டத்தில் உறுதியாக நின்று அகிம்சை ரீதியாகவும் ஜனநாயக வழிமுறையிலும் போராடிய முதுபெரும் தமிழ்தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கேட்டு நாம் மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் கொண்டுள்ளோம்.

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்காக அகிம்சா வழியில் இதுகாலவரை போராடி வந்த இத்தலைவர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசும், அதன் படைகளும் பலமுறை கொலை முயற்சி செய்தும் அவை பலிக்காது போயிற்று.

தலைவர்களைக் கொலை செய்வதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் முன்னெடுத்துச் செல்லும் போராட்ட உணர்வுகளை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தவோ, அல்லது முறியடிக்கவோ முடியாது.

அதேவேளை இத்தகைய கோழைத்தனமான செயல்களுக்கு எதிராக சகல தொழிலாளர்களும் முற்போக்கு ஜனநாயக சக்திகளும் ஐக்கியப்பட்டு போராடுவதுதான் திரு. அ. அமிர்தலிங்கம் திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோருக்கு நாம் செலுத்தும் இறுதி அஞ்சலியாகும். (உ)

## நவம், காண்டீபன் கொழும்பு வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 17

மறைந்த தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான திரு. வி. என். நவரத்தினம் லண்டனிலிருந்து நேற்றுக்காலை 8-30 மணியளவில் கொழும்பு வந்து சேர்ந்தார்;

அவருடன் திரு. அமிர்தலிங்கத்தின் மகன் திரு. காண்டீபனும் (ரவி) வந்தார். அவர் உடனடியாகக் கொழும்பிலிருந்து திருமலைசென்று தந்தையினதும் திரு. யோகேஸ்வரனினதும் பூதவுடல்களுக்கு அஞ்சலி செலுத்தினூர்.

திரு. வி. என். நவரத்தினம் யாழ் வந்து சேர்ந்தார்.

இதேவேளையில் திரு. அமிர்தலிங்கத்தின் மற்றொரு மகனும் இந்தியாவிலிருந்து நேற்று வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-உ-9)

## அமெரிக்க வீஸா

### 197 இலங்கையருக்கே!

கொழும்பு, ஜூலை 17

அமெரிக்காவில் நிரந்தரமாக வசிக்க 197 இலங்கைக் குடும்பங்கள் தகுதிபெற்றுள்ளன என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் சொன்னூர்.

லொத்தர் மூலம் உலகநாடுகளில் இருந்து தெரிவுச்செய்யப்படும் திட்டத்தின் கீழ் இக்குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டன.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை வாஷிங்டனில் இருந்து ராஜாங்க அமைச்சு அனுப்பியிருக்கிறது.

தகுதியானவர்களுக்கு தூதரகம் கடிதங்களை அனுப்பி வருகிறது.

இப்படி அப்பேச்சாளர் சொன்னூர்.

முன்னர் 442 விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது: அதன்பின்னர் 363 பேரே தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. (உ-எ)

## இளைஞர் சடலம் அரச செலவில் அடக்கம்

வவுனியா, ஜூலை 17

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உருக்குலைந்தநிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட — 26 வயது மதிக்கத்தக்க — இளைஞர் ஒருவரின் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

பூந்தோட்டக்குளப் பகுதியில் கிடந்த இந்தச் சடலத்தை, கடந்த புதன்கிழமை இப்பகுதி கிராம சேவையாளர் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைத்திருந்தார். (உ-164)

## திருகோணமலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வரிசையில் நின்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

நேற்று மாலை திருமலைக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் தொண்டமான், சிறிசேன கூரே, ஏ. ஆர். மன்சூர், துணை அமைச்சர் ஆர். பி. விஜயசிறி, ஏ. எச். எம். அஸ்வர் எம். பி., வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் நளின்செனவிரத்ன, மாகாண சபை உறுப்பினர் மசூர் மௌலானு ஆகியோரும் தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்;

பூதவுடல்கள் நேற்று மாலை மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன; (உ-ஒ-எ)

## ஜனாதிபதிக்கு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னுடன் வந்த எவரையும்—மெய்ப்பாதுகாவலர்களைக்கூட—உள்ளே செல்ல இந்திய அமைதிப்படையினர் அனுமதிக்கவில்லை என்று கூறப்படுகிறது:

பூதடல்களுக்கு அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி குழுவினர் பின்னர் மாகாண முதல்வர் திரு. வரதராஜப் பெருமாளுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு கட்டடத்தைவிட்டு வெளியேவந்தனர்;

அப்போது வெளியே கூடியிருந்த மக்கள் கற்களை எறிந்தும், கோஷம் எழுப்பியும் தமது எதிர்ப்பை ஜனாதிபதி குழுவினருக்குத் தெரிவித்தனர்

அடுத்து ஜனாதிபதி குழுவினர் திருமலை கோட்டைக்கு சென்றனர்: (உ-9)

## மந்துவிலில் மோதல்

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள மந்துவிலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மோதல் சம்பவம் ஒன்றுஇடம் பெற்றது.

மந்துவில் வேம்பிராய் பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடைபெற்ற போதே இந்த மோதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-76)

## வவுனியாவில் மழை

நீண்ட தொடர்ச்சியான கடும் வரட்சியின் பின்னர் கடந்த சில தினங்களாக வவுனியாவில் நல்ல மழை பெய்தது: (உ-164)

## அங்காடி வியாபாரிகள் விடுத்துள்ள அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ் அங்காடி வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் கே. ரமீஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

ஸ்ரீலங்கா அரசு தமிழ் பேசும் மக்கள் மீது இராணுவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அடக்கி ஒடுக்கப்பட்ட வேளையில் அதனை இந்தியாவிலும் சர்வதேச ரீதியிலும் எமது பிரச்சினைகளைத் தெரியப்பண்ணை தன்னுலான சகல … களையும் மேற்கொண்டவர்கள் இந்தத் தலைவர்கள்.

தந்தை செல்வாவின் வழிகாட்டலில் தமது அரசியலை சாத்வீக ரீதியான போராட்டமாக நடாத்தி வந்த இத் தமிழ்த் தலைவர்கள் அக் கொள்கையில் இறுதிவரை தளராது நம்பிக்கை கொண்டு செயற்பட்டவர்கள்:

காந்திய வழியில் நம்பிக்கை கொண்ட இத்தலைவர்களை காந்திஜீ போலவே சுடப்பட்டு மடிக்கப்பட்டுள்ளார்கள். (உ)

## பென்சிலின் செலுத்தப்பட்ட சிறுவன் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 17

13 வயதுச் சிறுவன் ஒருவனுக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பென்சிலின் ஊசி செலுத்தப்பட்டதை அடுத்து அச்சிறுவன் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரணமான சிறுவன் அச்சுவேலியைச் சேர்ந்த என். கிருபாகரன் என்பவர் ஆவார்.

இவரது மரண விசாரணை நேற்று யாழ். வைத்தியசாலை பொலீஸ் பகுதியில் இடம் பெற்றது:

மேற்படி சிறுவன் கடந்த பல மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்ததாகவும்—

நேற்று இவருக்கு பென்சிலின் ஊசி ஏற்றப்பட்டது என்றும், அதையடுத்து சற்று நேரத்தில் சிறுவன் மரணமானதாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது: (ஒ-9

## இரு சரக்கு ரயில்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணத்துக்கு நேற்று இரண்டு சரக்கு ரயில்களில் அரிசி, சீனி, பருப்பு போன்ற உணவுப் பொருள்களும், எரிபொருளும் எடுத்து வரப்பட்டன. (ஒ-10-3)

## யாழ் - கொழும்பு தனியார் பஸ் சேவை நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ் — கொழும்பு தனியார் பஸ் சேவைகள் நேற்று நடைபெறவில்லை;

யாழ்- கொழும்பு தனியார் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ள தாகவும் நாளை செவ்வாய்க்கிழமை முதலே சேவைகள் ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது; (ஒ-3)

## சிகரெட்டுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். மாவட்டத்தில் சிகரெட்டுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது; வியாபாரிகள் சிகரெட்டை அதிக விலைக்கு விற்கிறார்கள். (ஒ-3)

## சின்னக்கடையில் வேட்டுச்சத்தங்கள்

குருநகர், ஜூலை 17

யாழ் சின்னக்கடை குருநகர் பகுதிகளில் நேற்றுக்காலை திடீரென தீர்க்கப்பட்ட வேட்டுக்களை அடுத்து அப்பகுதிகளில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது; (ஒ-51)

## 3 சடலங்களும் அடையாளம் காணப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 17

நேற்று முன்தினம் சனிக்கிழமை திருநெல்வேலிப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட இருவரது சடலங்களும், பலாலி வீதியில் சுட்டுக்கொல்லப்பட்டவரது சடலமும் நேற்று யாழ் வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்டன.

திருநெல்வேலியில் கொலையுண்டவர்கள் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சோமசுந்தரம் திருமுருகன் (வயது 28) நாயன்மார்கட்டைச் சேர்ந்த கார்த்திகேசு சிவபரன் (வயது 17) என்றும்—

பலாலி வீதி அம்மன் ரோட் சந்தியில் கொலையுண்டவர் மட்டுவிலைச் சேர்ந்த செல்லத்துரை சச்சிதானந்தன் (வயது 46) எனவும் அடையாளம் காணப்பட்டனர் (ஒ-9)

## பணப்புழக்கம்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தை உடனடியாகப் பெறுவார்கள்.

ஆனுல் வங்கி வேலைகள் வழமைக்குத் திரும்பாத காரணத்தைக் காட்டி வர்த்தகர்கள் காசோலைக்குப் பொருள்கள் வழங்க மறுப்பதால் வெளியூர், உள்ளூர் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்;

அத்துடன் கொழும்பில் பணப்புழக்கமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிய வந்தது; (இ-7)

## OBITUARY

### REV. SISTER COLETTE

The death is announced of Rev. Sr. Colette. Beloved sister of Mrs. Felicitas Selladurai, late Rev. Sr. Peter, Rev. Sr. Assumpta (Contemplative House, Manipay) and late Albert Ignatius, aunt of Rev. Sr. Jacintha Marie.

Funeral Service will take place, on 18th July 1989 at 7-00 a. m. at Holy Family Convent, Passaiyoor;

Mrs. SELLADURAI
Chapel Street,
Jaffna.

(11560)

## மரண அறிவித்தல்கள்

### அருட் சகோதரி கொளற்

கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி கொளற் அவர்கள் தமது 80 ஆவது வயதில் 16-7-89 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னுரின் இறுதிச் சடங்குகள் (18 - 7 - 89) நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்குப் பாஷையூரிலுள்ள எமது திருக்குடும்ப இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்;

தகவல்:
மாகாணத் தலைவி தி. கு.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[11559]

### திரு. ஐயாத்துரை நடராசா

திரு. ஐயாத்துரை நடராசா (முன்னை நாள் C T B ஊழியர்) 15-7-89இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக்கணவரும், தங்கராணி, வசந்தராணி (ஆஸ்ரேலியா), செல்வராணி, சோதிராணி (பிரான்ஸ்), அற்புதம் (சுவிஸ்லாந்து), சிறிரங்கராஜா, ஜெயலோகராசா (சுவிஸ்லாந்து), இந்திரானந்தராசா (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், விசுவரட்ணம் (முன்னைநாள் ஆசிரியர்), மகாதேவா (ஆசிரியர் கொத்மலை), சவுரிராசா (ஆஸ்ரேலியா), சதானந்தராசா (பிரான்ஸ்), சரோஜினி, தவமணி, பரமேஸ்வரி (சுவிஸ்லாந்து), நந்தினி (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனுரும், சுரேஸ் (கனடா), சுமதி, றமேஷ் (சுவிஸ்லாந்து), பிரதீஸ் (சுவிஸ்லாந்து), சுகதீஸ், அகிலா, நந்தராஜ், விஜேகாந்தன், அகல்யா, தேவசங்கர், ராஜ்சங்கர், கிரிதர், கயகோபன், ஜெனேசா, ஜிந்துயா ஆகியோரின் பேரனும், பஞ்சலிங்கத்தின் அன்புச்சகோதரரும் ஆவார்: அன்னுரின் பூதவுடல் (உரும்பராய் தெற்கு) அவர்களின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக 18 - 7 - 89 காலை 10.30 மணிக்கு வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:
ரங்கன்

உரும்பராய் தெற்கு

(11558)

### கைதடி முத்துத்தம்பி நல்லையா

கைதடி முத்துத்தம்பி நல்லையா (முன்னுள் பிரதம கணக்காளர் குடிசைக் கைத்தொழில் திணைக்களம்) காலமாகி விட்டார். இவர் சகுந்தலாவின் அன்புக் கணவரும், குமரகுருபரன் (கணக்காளர்), தயாபரன் (கனடா), நளாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதிராணியின் அன்பு மாமனுரும் காலம் சென்ற சதாசிவம் சங்கரப்பிள்ளை (புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் சகோதரரும், மனோகரியின் சிறிய தந்தையும், காலம் சென்ற வதிரி சபாரத்தினம் அவர்களின் மருமகனுமாவார்: இறுதிக் கிரியைகள் 17 - 7 - 89 திங்கட்கிழமை நடைபெறும்:

"பரன்கிரி"
கைதடி கிழக்கு,
கைதடி

தகவல்:
மனைவி

(1312)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம் … அச்சகத்தில் 17-07-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org